Paper ID: IC19

# "போதைப் பொருள் பாவனையும் மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான அதன் தாக்கங்களும்" ஏறாவூர் பொலிஸ் பிரிவை மையப்படுத்திய கள ஆய்வு


**MLM. Helfan[1] , SMM. Mazahir[2] & MHM. Nairoos[3]**

1,2&3 Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
mlhelfan@gmail.com, mazahirsmm@seu.ac.lk, nairoosmhm@gmail.com



### ஆய்வுச் சுருக்கம்

போதைப் பொருள் பாவனை குடும்பப் பிரச்சினைகளுக்கும் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்படைவதற்கும் அடித்தளமிட்டுள்ளது. ஏறாவூர் பொலிஸ் பிரிவில் பயன்பாட்டிலுள்ள போதைப் பொருள் வகைகளை அடையாளப்படுத்துவதோடு, போதைப் பொருளினால் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்புறும் வடிவங்களையும் இனங்காணுதல் இவ்வாய்வின் நோக்கங்களாகும். பண்பு ரீதியான ஆய்வு முறையிலமைந்த இவ்வாய்வு, ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பொருள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுகின்ற பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் உயர் அதிகாரி மற்றும் சமூக நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக 10 நிறுவனங்களின் முக்கியஸ்தர்களிடம் பெறப்பட்ட நேர்காணலின் பகுப்பாய்வினையும் மேலும் பெறப்பட்ட ஆவணங்களின் மீளாய்வினையும் மையப்படுத்தியது. அவற்றின்படி பதிவு செய்யப்படுகின்ற குற்றச் செயல்களில் போதைப் பொருள் தொடர்பான குற்றச்செயல்களே அதிகமாகும். அதிலும், மதுபாவனை முதன்மை இடத்தைப் பெற்றிருப்பதோடு, அதற்கு அடுத்தடுத்த நிலையில் கஞ்சா, ஹெரோயின், புகையிலை, அபின் என்பன காணப்படுகின்றன. போதைப் பொருள் பாவனையின் காரணமாக மகளிர் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் வடிவங்களில் மகளிர் எதிர் கொள்ளும் பிரச்சினைகளே அதிகமாகும். அதில் குடும்பப் பிரச்சினைகள் முன்நிலை பெற்றுள்ளது. அடித்தல், தொந்தரவு செய்தல், ஏமாற்றுதல் போன்ற வடிவங்களில் மகளிர் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவர்களைப் பொறுத்தவரை அடித்தல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கான முன்னெடுப்புக்கள், அதற்கான வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர் காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.



**திறவுச் சொற்கள்:-** ஏறாவூர் பொலிஸ் பிரிவு, போதைப் பொருள் வடிவங்கள், மகளிர் மற்றும் சிறுவர்கள்.


### ஆய்வுப் பின்னணி

மனிதனின் சுய நிலையை சீர்குலைத்து, புத்தியை மங்க வைத்து, நல்வாழ்வுக்கு பங்கம் விளைவிக்கும் விடயங்களுள் போதைப் பொருள் முதன்மை பெறுகின்றது. சுயாதீனமான உடல், உள ஆரோக்கியமுள்ள மனிதனின் சாதாரண நிலையை மாற்றி அசாதாரண தன்மைகளான தீமைகள், கொடுமைகள், வன்முறைகள் போன்றவற்றை தனக்கும் தான் சார்ந்திருக்கும் சமூகத்திற்கும் விளைவிற்பதற்குத் தூண்டுகோலாக அமைகின்ற ஒரு விஷக் கிரிமியே போதையாகும். சாதாரண வீட்டு மட்டத்தில் ஆரம்பித்து சர்வதேசம் வரை அதன் தாக்கம் பாரிய அளவில் பேசப்படும் நிலை உருவாகியுள்ளதோடு, அது தொடர்பான

விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சர்வதேச தினமும் உருவாக்கப்பட்டிருப்பதானது அதன் தாக்கத்தின் வியாபகத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்கள், விழிப்புணர்வூட்டல், போதைப் பொருள் ஒழிப்புத் திட்டங்கள், கருத்தரங்குகள் உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற போதிலும் அதனால் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இஸ்லாம் 1438 வருடங்களுக்கு முன்னரே போதையின் விபரீதங்களை மிகவும் துல்லியமாக எடுத்தியம்பியுள்ளது. ''ஈமான் கொண்டோரே மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே, நீங்கள் இவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்து விடத்தான். எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா?'' (அல்குர்ஆன், 5 : 90 மற்றும் 91)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''போதை தரும் அனைத்தும் ஹராமாகும்.'' (அறிவிப்பவர் இப்னு உமர் (ரழி), ஆதாரம்: முஸ்லிம் 3739) என அல்குர்ஆன், மற்றும் ஹதீஸ் ஆகிய இரண்டும் எச்சரிக்கின்றன.

இந்தவகையில் உலக சனத்தொகையில் 100 கோடி பேர் புகைப்பழக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் 50% வீதமானோரும், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 30% வீதமானவர்களும் இதற்கு அடிமைப்பட்டுள்ளதோடு, தினமும் 250 மில்லியன் பெண்கள் புகைப்பிடித்தலில் ஈடுபடுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (பரீட்சை வழிகாட்டி, 2017)

இலங்கையிலும் கூட போதைப் பொருளின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது என ஊடகங்களில் இலங்கை ஜனாதிபதி கருத்துத் தெரிவித்துள்ளார். (President Maithripala Srisena, 19.01.2016) குடிப்பாவனையில் உலகளவில் இலங்கை 04 ஆவது இடத்தைப் பிடித்திருக்கும் அதேவேளை வருடாந்தம் சராசரியாக 7875 நபர்கள் இதனால் மரணத்தைத் தழுவுகின்றார்கள். இலங்கையில் அதிகூடியளவில் மதுபானம் அருந்தப்படும் பகுதிகளான நுவரெலியா, யாழ்ப்பாணம் எனும் பிரதேசங்களுக்கு அடுத்தபடியாக கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டமே முதன்மை பெறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் ஒரு மாதத்தில் 41 கோடி 36 இலட்சத்து 99 ஆயிரத்து 680 ரூபாய் மதுவிற்காக மக்களால் செலவழிக்கப்படுகின்றது. (ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத், 2017)

அதுமாத்திரமின்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 மதுபானசாலைகளே சட்டரீதியாக இயங்க முடியும் என்றாலும், தற்போது இம்மாவட்டத்தில் 58 மதுபானசாலைகள் அமைந்துள்ளதோடு சுற்றுலாத்துறை விடுதிகளில் சட்டரீதியற்ற 38 மதுபானசாலைகள் இயங்கி வருகின்றன. 55 பில்லியன் ரூபா சிகரட்டின் மூலமும் 60 பில்லியன் ரூபா மதுபானத்தின் மூலமாகவும்

மொத்தமாக 115 பில்லியன் ரூபா அரச வருமானத்தில் சேர்க்கப்படுகின்றது. (President Maithripala Srisena, 19.01.2016)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போதைப் பொருள் பாவனையின் வீதம் அதிகரித்து காணப்படும் அதேவேளை, அதன் மூலம் மகளிர் மற்றும் சிறுவர்கள் அதிகளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஏறாவூர் பொலிஸ் அறிக்கை காண்பிக்கின்றது. கடந்த நான்கு வருடங்களில் மொத்தமாக கிடைத்த 2235 முறைப்பாடுகளில் 1724 (77.13%) முறைப்பாடுகள் போதைப் பொருள் தொடர்பானதாகவே அமைந்துள்ளது. எனவே, இப்பிராந்தியத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதை இதன் மூலம் உணரலாம். இந்த அடிப்படையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் பயன்படுத்தப்படும் போதைப் பொருள் வடிவங்களையும் அதனூடாக மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படும் விதத்தினையும் தேடுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் போதைப் பொருள் பாவனையின் காரணமாக மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்புற்று, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல் அதிகரித்துக் காணப்படுதல்.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. ஏறாவூர் பொலிஸ் பிரிவில் பயன்பாட்டிலுள்ள போதைப் பொருள் வகைகளை அடையாளப்படுத்தல்.
2. ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பொருளினால் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்புறும் வடிவங்களை இனங்காணுதல்.

**ஆய்வுமுறையியல்**

பண்புரீதியான ஆய்வு முறையிலான இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். பிராந்தியத்தில் காணப்படுகின்ற 10 சமூக நிறுவனங்களின் முக்கியஸ்தர்களிடம் நேர்காணல் செய்யப்பட்டதோடு, பொலிஸ் நிலைய அறிக்கையும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டது. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி 2ஆம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தகவல்கள் coding முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு, விரிதாள் (Excel Sheet) மூலம் விளக்கங்களும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும், பிரதான கண்டறிதல்களும்**

2013 - 2016 வரையான காலப்பகுதிகளில் ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் போதைப் பொருளுடன் தொடர்பான குற்றச் செயல்களே அதிகமாகக் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நான்கு வருடங்களில் மொத்தமாக 2235 குற்றச் செயல்களில் 1724 (77.13%) குற்றங்கள் போதையுடன் தொடர்பானதாகவே உள்ளது. 2016 ஆம் ஆண்டு

காலப்பகுதியில் போதைப் பொருள் தொடர்பான குற்றம் (84.50%) வீதத்தின் அடிப்படையில் முதன்மை பெறுவதோடு அதற்கு அடுத்தடுத்த நிலையில் 2014ஆம், 2015ஆம் ஆண்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனை பின்வரும் அட்டவணை 1 காண்பிக்கின்றது.

அட்டவணை - 01

| **விபரம்** | **2013** | **2014** | **2015** | **2016** | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொத்த குற்றச்செயல்கள் | 762 | 683 | 435 | 355 | **2235** |
| போதைப் பொருளுடன் தொடர்பான குற்றச்செயல்கள் | 517 (67.84%) | 562 (82.28%) | 345 (79.31%) | 300 (84.50%) | **1724 (77.13%)** |
| ஏனையவை | 245 (32.16%) | 121 (17.72%) | 90 (20.69%) | 55 (15.50%) | **511 (22.87%)** |

(மூலம்: ஏறாவூர் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு, 2016)

ஆய்வுப் பிரதேசமான ஏறாவூர் பொலிஸ் பிரிவில் மதுபானம், கஞ்சா, ஹெரோயின், அபின், புகையிலை போன்ற போதைப் பொருட்களின் பாவனை இடம்பெறுகின்றதை கண்டறிய முடிந்தது. இருந்த போதிலும் நவீன காலத்தில் அறிமுகமாகியுள்ள போதைப் பொருட்களான மாத்திரைகள், ஹொரக்ஸ் பாவிப்பவர்கள் தொடர்பான குற்றச் செயல்களின் அறிக்கைகள் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

ஆய்வுப் பிராந்தியத்தில் மதுபானம் பாவிப்பது 2013 இல் 485 (93.81%), 2014 இல் 415 (73.85%), 2015 இல் 184 (53.33%), 2016 இல் 167 (55.67%) ஆகிய ஆண்டுகளில் இறங்கு வரிசையைக் காட்டும் அதேவேளை, தற்பொழுது இங்கு இடம்பெறும் ஏனைய போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் ஒப்பிடும் போது (1724) மதுபாவனை முதன் நிலையில் 1251 (72.56%) உள்ளது.

கஞ்சா தொடர்பான குற்றச் செயல்களைப் பொறுத்தமட்டில் 2013ஆம் ஆண்டு 8 (3.49%) வீதமாக இருந்து, 2014ஆம் ஆண்டு மிக வேகமாக 126 (22.41%) வீதமாக அதிகரித்து, 2015ஆம், 2016ஆம் ஆண்டுகளில் 44.0% வீதமாக வளர்ந்து கொண்டே சென்றுள்ளதை காண முடிந்துள்ளது. இருந்த போதிலும் கடந்த நான்கு வருடங்களில் இப்பிராந்தியத்தில் இடம் பெற்ற ஏனைய போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்களுடன் ஒப்பிடும் போது கஞ்சா தொடர்பான குற்றச் செயல் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

அதே போன்று ஹெரோயின் பாவனை 2013ஆம் ஆண்டு இடம்பெறாத போதிலும் 2014ஆம் ஆண்டு சடுதியாக 19 ஆக உயர்வடைந்து, 2015 இல் 11ஆக குறைவடைந்து 2016ஆம் ஆண்டு 01 ஆக இருப்பது அதன் பாவனை குறைவடைந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.

நான்கு வருடங்களில் அபின் தொடர்பான குற்றச் செயல் இடம்பெற்றது மிகக் குறைவாகவே உள்ளது. இருந்த போதிலும் 2015ஆம் ஆண்டு மட்டும் 1 (0.28%) வீதமாக இருந்துள்ளது. புகையிலை பாவித்தலைப் பொறுத்தமட்டில் 2013 ஆம் ஆண்டு அதிகரித்து 14 (2.70%), 2014ஆம் ஆண்டு 2 (0.35%) சடுதியாகக் குறைவடைந்து 2015, 2016ஆம் ஆண்டுகளில்

முற்றாக இல்லாமல் போய் உள்ளது. இருந்த போதிலும் கடந்த நான்கு வருடங்களில் புகையிலை தொடர்பாக குற்றச் செயல் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேற்கூறப்பட்ட விடயங்களை பின்வரும் அட்டவணை 2 இன் மூலம் அறியலாம்.

அட்டவணை - 02

| **ஆண்டு** | **2013** | **2014** | **2015** | **2016** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| மதுபானம் | 485 (93.81%) | 415 (73.85%) | 184 (53.33%) | 167 (55.67%) | **1251 (72.56%)** |
| கஞ்சா | 18 (3.49%) | 126 (22.41%) | 152 (44.0%) | 132 (44.0%) | **428 (24.83%)** |
| ஹெரோயின் | 0 | 19 (3.39%) | 8 (2.31%) | 1 (0.33%) | **28 (1.62%)** |
| அபின் | 0 | 0 | 1 (0.28%) | 0 | **1 (0.058%)** |
| புகையிலை | 14 (2.70%) | 2 (0.35%) | 0 | 0 | **16 (0.92%)** |
| மொத்தம் | **517** | **562** | **345** | **300** | **1724** |

(மூலம்: பொலிஸ் நிலையம் (சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு) ஏறாவூர், 2016)

ஆய்வுப் பிரதேச பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடுகளை மையப்படுத்தியே மேற்கூறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பயம், குடும்ப மானம், பொலிஸ் கெடுபிடிகள் போன்ற காரணங்களினால் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யாத போதைப் பொருளோடு தொடர்பான பல நிகழ்வுகள் இருக்க முடியும். சிலபோது முறைப்பாடு செய்ததை விட அதிகப்படியாகவும் அவை அமைந்திருக்க முடியும். அவை இவ்வாய்வில் உள்வாங்கப்படவில்லை.

ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பொருளினால் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்புறும் வடிவங்களை நோக்கும் போது குடும்பப் பிரச்சினைகள், மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு அடித்தல், சிறுவர் துஷ்பிரயோகம், மனைவிக்கு தொல்லை கொடுத்தல், பெண்களை திருமணம் முடிப்பதாகக் கூறி ஏமாற்றல், வேறு வகையான பிரச்சினைகள் என்ற வடிவங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படுவதை ஏறாவூர் பொலிஸ் நிலைய அறிக்கை எடுத்துக் காண்பிக்கின்றது.

மகளிர்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களில், மகளிர்கள் அடையும் பாதிப்புக்களே அதிகமாக உள்ளன. அதிலும் குறிப்பாக போதைப் பொருள் பாவனையின் காரணமாக குடும்பப் பிரச்சினைகள் முதன்மை பெறுகின்றது. கடந்த 2013 - 2016 வரையான நான்கு வருடங்களில் மொத்தமாக 3382 முறைப்பாடுகளில் 1907 (56.38%) முறைப்பாடுகள்

குடும்பப் பிரச்சினைகள் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. இது மொத்தப் பிரச்சினைகளில் 56% சத வீதத்தை எடுத்துக்காட்டும் அதேவேளை பிரச்சினைகளிலும் முதன்மை பெறுகின்றது.


போதைப் பொருள் பாவனையில், குடும்பப் பிரச்சினைகளுக்கு அடுத்த நிலையில் மனைவி, பிள்ளைகளுக்கு அடித்து உடலியல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் நிலை இங்கு உருவாகியுள்ளது. கடந்த நான்கு வருடங்களில் ஒவ்வொரு வருடமும் இதன் தாக்கம் அதிகரித்தே காணப்படுகின்றது. இது நான்கு வருடங்களின் மொத்த (3382) முறைப்பாடுகளில் 752 (22.23%) முறைப்பாடுகள் உடலியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தரப்படுத்தலின் அடிப்படையில் இது இரண்டாம் இடத்தைப் பெற்று விளங்குகின்றது.

மனைவியின் சுதந்திரத்தைக் கெடுக்கும் வகையில் தொல்லை கொடுக்கும் நிலையும் இங்கு போதையின் காரணமாக உருவாகியுள்ளது. 2013ஆம் ஆண்டில் அதன் தாக்கம் உயர்வாகக் காணப்பட்டு 102 (17.02%) , 2014, 2015ஆம் ஆண்டுகளில் ஓரளவு குறைந்து 2016ஆம் ஆண்டில் அது சடுதியாக அதிகரித்துள்ளது. இது மொத்தமாக 3382 முறைப்பாடுகளில் 349 (10.31%) முறைப்பாடுகள் தொல்லை சார்ந்ததாக இடம்பெற்று இப்பிராந்தியத்தில் இப்பிரச்சினை மூன்றாம் நிலையைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

போதைப் பொருள் பாவனையினால் பெண்கள் மாத்திரமல்ல சிறுவர்களும் பாதிப்படைந்துள்ளார்கள் என்பதை அதே பொலிஸ் அறிக்கை எடுத்துக் காண்பிக்கின்றது. கடந்த 2013ஆம் ஆண்டு 7 (1.16%) ஆகக் காணப்பட்ட இப்பிரச்சினை 2014ஆம் ஆண்டு அதிகரித்து 2015, 2016ஆம் ஆண்டுகளில் வீதத்தில் அதிகரிக்காவிட்டாலும், முறைப்பாடுகளில் அதிகரித்துக் காணப்பட்டுள்ளது. அதுமாத்திரமின்றி நான்கு வருடங்களில் மொத்தமாக 154 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு, முறைப்பாட்டு தரவரிசையில் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

குடிபோதையின் விளைவாக வேறு பல அசௌகரியங்களையும் மகளிர் மற்றும் சிறுவர்கள் எதிர் கொள்கிறார்கள் என்பதை பொலிஸ் அறிக்கை காண்பிக்கின்றது. கடந்த 2013 – 2016 வரையான நான்கு வருடங்களில் (139) இது அதிகரித்தே காணப்படுவதோடு, முறைப்பாட்டு வரிசையில் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளது. அத்துடன் பெண்களை திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றும் செயற்பாடும் போதைப்பொருள் பாவனையால் இடம்பெறுவதைக் காண முடிகிறது. இருந்தபோதிலும் 2013ஆம் ஆண்டு இது தொடர்பாக பதிவு செய்த முறைப்பாடு அதிகரித்த போதிலும் அதற்கு அடுத்தடுத்த காலங்களில் குறைவடைந்து மொத்த முறைப்பாடுகளில் ஆறாம் இடத்தையும் பெற்றுள்ளது. மேற் கூறப்பட்ட அத்தனை முறைப்பாடுகள் தொடர்பான விடயங்களையும் பின்வரும் வரைபடம் – 01 காண்பிக்கின்றது.

**வரைபடம் - 01**




(மூலம்: பொலிஸ் நிலையம் (சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு) ஏறாவூர், 2016)

இப்பிராந்தியத்தில் காணப்படுகின்ற இந்து கோயில், விகாரை, கிறிஸ்தவ தேவாலயம், முஸ்லிம் பள்ளிவாயல், இளைஞர் கழகம் (தமிழ்), இளைஞர் கழகம் (முஸ்லிம்), விளையாட்டு சங்கம், மகளிர் மற்றும் சிறுவர் அமைப்பு, கிராமசேவகர், த.ஃ.வா அமைப்புக்கள் போன்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்களிடம் போதைப் பொருள் பாவனையும் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படுவதும் தொடர்பாக நேர்காணல் செய்யப்பட்டதற்கு அமைவாக கிடைக்கப் பெற்ற தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இவ்வமைப்புக்களின் கருத்துக்களின்படி இப்பிராந்தியத்தில் போதைப் பொருள் பாவனை மிகையாக அதிகரித்திருக்கின்றது என்பதற்கு இங்கு நடைபெறும் கொள்ளை, கொலை, கற்பழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், குடும்பப் பிரச்சினைகள் போன்ற சீர்கேடுகள் சான்றுபகர்கின்றது. அதுமாத்திரமின்றி முஸ்லிம் பிரதேசம் தவிர்ந்த ஏனைய தமிழ் பகுதிகளில் அமைந்துள்ள மாதுபானசாலைகள் இச்சீர்கேடுகளுக்கு மேலும் வலு சேர்த்துள்ளது. இன்னும் சட்டரீதியற்ற போதைப் பொருள் விற்பனை செய்பவர்களும் இப்பிராந்தியத்தில் இருக்கிறார்கள் என்பதை, பொலிஸார் கைதுசெய்யும் வேளையிலேயே புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இன்னும் மாலை நேரங்களில் பிராந்தியத்தில் அமைந்துள்ள மதுபானசாலைகளில் அதிகமானவர்கள் மதுபானங்களைக் கொள்வனவு செய்வதையும் தந்தை மகனிடம் அல்லது மகளிடம் சிகரட், புகையிலை என்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அனுப்புவதையும் பாழடைந்த கட்டிடங்களில் இளைஞர்கள் பார்ட்டி (Party) என்ற பெயரில் மதுஅருந்தி நகரத்தில் உள்ள வீடு, கடை என்பனவற்றைக் கொள்ளையடிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆண்களின் போதைப் பொருள் பாவனையினால் பாதிப்படைந்த மகளிர் மற்றும் சிறுவர்கள் நிவாரணம் தேடி எல்லா சமூக அமைப்புக்களுக்கு செல்வது மிகக் குறைவாகும். இருந்தபோதிலும், முஸ்லிம் பள்ளிவாயல்களுக்கு ஓரிரு பிரச்சினைகள் வருகின்றன. அப்பிரச்சினைகளை பள்ளிவாயல் நிர்வாகம் முடிந்தளவு தீர்க்க முயற்சி செய்யும்

அதேவேளை சாத்தியப்படாவிடத்து பொலிஸாருக்கு அப்பிரச்சினைகள் மாற்றீடு செய்யப்படுகின்றன.

இன்னும் இப்பிராந்தியத்தில் தமிழ், முஸ்லிம்கள் செறிந்து வாழுகின்ற அதேவேளை, போதையினால் ஓர் இனத்தால் மற்றைய இனத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது மிகக் குறைவு என்றே கூறவேண்டும்.

**முடிவுரை**

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்படைவதில் போதைப் பொருள் பாவனை பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. போதைப் பொருள் பாவனையில் மதுபாவனை முதன்மை இடத்தைப் பெற்றிருப்பதோடு, போதைப் பொருள் தொடர்பான குற்றங்களே அதிகமாகும். போதைப் பொருள் பாவனையின் காரணமாக மகளிர் மற்றும் சிறுவர்கள் பல்வேறுவிதமாக உடலியல், உளவியல், சமூகவியல் சார்ந்த குடும்பப் பிரச்சினைகள், அடித்தல், தொந்தரவு செய்தல், ஏமாற்றுதல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். அவற்றுள் குடும்பப் பிரச்சினைகள் இடம்பெறுவதே அதிகமாகும். எனவே சமூக ஆர்வலருக்கும், பொது அமைப்புக்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் துணையாக அமையவல்லது.

**பரிந்துரைகள்**

- ✓ மதஸ்தலங்கள், மதக் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என்பன போதைப் பொருள் பாவனையின் பாரதூரம், பாதக விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள், இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல்.

- ✓ ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

- ✓ போதைப் பொருள் பாவனையாளர்களை விஷேடமாக இனங் கண்டு, அவர்களை சீர்திருத்துவதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடாக முயற்சிகளை மேற்கொள்ளல்.

- ✓ போதைப் பொருள் பாவனையாளர்களால் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படும் போது நிவாரணம் பெறுவதற்கான வசதிகளையும் வழிமுறைகளையும் ஏற்படுத்துதல்.

- ✓ தேவையற்ற முறையில் இரவு நேரங்களில் கைவிடப்பட்ட கட்டிடங்களில் ஒன்று கூடுதல், தேவையற்ற முறையில் நடமாடுதல், மர்ம நபர்களின் நடமாட்டம் போன்றவற்றை பொலிஸாரும் ஊர்த் தலைவர்களும் கண்காணித்தல்.

**உசாத்துணைகள்**


1. தர்ஜமதுல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு, (2015) இலங்கை, ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா தலைமையகம் - பறகஹதெனிய.
2. **பரீட்சை வழிகாட்டி (25.05.2016). " இளம் சந்ததியினரை குறி வைக்கும் போதைப் பொருள் பாவனை." [online] available: (https://Slasgk.blogspot.com) [accessed]: [05.04.2017].**
3. பொலிஸ் நிலையம் (சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு), (2016). வருடாந்த அறிக்கை – 2016. ஏறாவூர்: பொலிஸ் நிலையம்.
4. மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத், (2017). "மெண்டிஸ் மதுபான உற்பத்தித் தொழிற்சாலை நிர்மானப் பணிகளை உடன் நிறுத்து", மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத்.
5. ஸஹீஹுல் முஸ்லிம்
6. President Maithripala Srisena. (19.01.2016). **"சட்டவிரோத போதைப் பொருள் பாவனை சமூகத்தில் பாரிய பிரச்சினையாகியுள்ளது." [ online] available: http:// www.newsfirst.lk [accessed]: [05.04.2017].**


**நேர்காணல்**

7. அலியார், கிராம சேவகர், ஏறாவூர், 15. 05. 2017.
8. சாஜன் சில்வா, போதைப் பொருள் தடுப்புப்பதிகாரி, ஏறாவூர் பொலிஸ் நிலையம், 17.05.2017.
9. சிறின்தான்,பி.எம். தலைவர், பெண்கள் சமூக மறுமலர்ச்சி மன்றம், ஏறாவூர். 15.05.2017
10. நளீம், எஸ்.ஏ., தலைவர், அஸ்ஸலாமா அமைப்பு, 15.05. 2017.
11. பரசுராமன் தவராசா, தலைவர், பிள்ளையார் கோயில் சித்தான்டி, 20.05.2017
12. வாஜித், எம்.எல்.ஏ., தலைவர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஏறாவூர் கிளை, 19.05.2017